**தமிழ் இணையக் கல்விக்கழகம்**

**சென்னை – 600 025.**

**இளநிலைத் தமிழியல் – பட்டம் (B.A. TAMILOLOGY – Degree)**

**இரண்டாம் பருவம்**

**நேரடி எழுத்துத் தேர்வு (OFF – LINE WRITTEN EXAMINATION)**

**மே, சூன் – 2016**

**P202 சமயத் தமிழ் இலக்கியம்**

**காலம் : 3 மணி நேரம்** **மதிப்பெண்கள் : 75**

**(குறிப்பு : பிரிவு – 1இல் இருந்து எல்லா வினாக்களுக்கும் விடை தர வேண்டும். விடை ஒன்றிற்கு ஒரு மதிப்பெண். பிரிவு – 2இல் இருந்து ஐந்து வினாக்களுக்கு விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் ஒரு பத்திக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 3 மதிப்பெண்கள். பிரிவு – 3இல் இருந்து மூன்று வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் 3 பக்கங்களுக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 15 மதிப்பெண்கள்.)**

**பிரிவு – 1**

**ஒரு சொல் / தொடரில் விடை தருக.** **(15x1=15)**

1. "உலகின் மிகப் பழைய சமயமாகச் சைவம் விளங்குகிறது" என்று கூறியவர் யார்?
2. சங்கம் மருவிய காலத்தில் தோன்றிய இருபெரும் காப்பியங்கள் யாவை?
3. இறைவன் எத்தனை வடிவங்களை உடையவன் என்று மணிமேகலை கூறுகிறது?
4. "யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்" இக்கூற்றின் ஆசிரியர் யார்?
5. வன்தொண்டன் என்று அழைக்கப்பட்டவர் யார்?
6. சேக்கிழாரின் இயற்பெயர் என்ன?
7. நால்வர் நான்மணிமாலை என்னும் நூலின் ஆசிரியர் யார்?
8. முல்லைநில மக்களின் திணைக் கடவுள் யார்?
9. மண்ணரசு வேண்டாது விண்ணரசை வேண்டி நின்றவர் யார்?

10. திருப்பதிக்கோவைக் காட்டும் வைணவத் திருத்தலங்கள் எத்தனை?
11. நால்வகை வேதத்தில் பழமையானது எது?
12. உரையாசிரியர் என்று பாராட்டப்படுபவர் யார்?
13. சமணசமயத்தின் வேறுபெயர் என்ன?
14. "புத்தம்வீடு" என்னும் புதினத்தின் ஆசிரியர் யார்?
15. இஸ்லாமியத் தமிழ் இலக்கியங்களின் எண்ணிக்கை யாது?

## பிரிவு – 2

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு ஒரு பத்தி அளவில் விடை தருக.** **(5x3=15)**

1. சைவம் என்பதன் விளக்கம் யாது?
2. தேவாரம் பாடிய மூவர் யார்?
3. சேக்கிழாருக்குக் கிடைத்தப் பட்டங்கள் யாவை?
4. குமரகுருபரர் நூல்களில் ஏதேனும் மூன்றினைக் குறிப்பிடுக.
5. மணிப்பிரவாளநடை என்றால் என்ன?
6. முதல் மூன்று ஆழ்வார்களைக் குறிப்பிடுக.
7. வடக்கிருத்தல் என்றால் என்ன?
8. நபிகள்நாயகம் நிகழ்த்திக் காட்டிய அற்புதங்களில் இரண்டினைக் கூறுக.

## பிரிவு – 3

**மூன்று பக்கக் கட்டுரை வடிவில் விடை தருக.** **(3x15=45)**

1. (அ) சங்க இலக்கியத்தில் காணப்படும் சிவனைப் பற்றிய கருத்துக்களை தொகுத்து எழுதுக?

(அல்லது)

(ஆ) தேவாரம் பாடிய மூவர் குறித்து கட்டுரை வடிவில் விடை தருக.

2. (அ) சிற்றிலக்கியங்களில் காணப்படும் வைணவம் குறித்த செய்திகள் குறித்து எழுதுக.

(அல்லது)

(ஆ) சிலப்பதிகாரத்தில் சமண மதக்கோட்பாடுகள் குறித்து விளக்குக.

3. (அ) கிறித்தவ கவிதைகளில் வெளிப்படும் சமுதாயச் சீர்திருத்தக் கருத்துக்களைக் குறிப்பிடுக.

(அல்லது)

(ஆ) இஸ்லாமிய எழுத்தாளர்களின் உரைநடைப் படைப்புகளை விளக்குக.